“மழைநீர் சேமிப்போம்” “பிளாஸ்டிக்கை தவிர்ப்போம் “

நகராட்சி அலுவலகம்,
தேனி – அல்லிநகரம் ,
நாள் : 08.12.2020.

## நகர்மன்ற அவசர கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2051 சார்வரி வருடம், கார்த்திகை மாதம் 23-ம் நாள் 08.12.2020-ம் தேதி செவ்வாய் கிழமை காலை 10.35 மணி அளவில் நகர்மன்ற அலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்ற அவசரக் கூட்டம் நடைபெறும்

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
தேனி – அல்லிநகரம் நகராட்சி

## பொருள் 01 :

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் TN60 L 6394-க்கான வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்வதற்கு விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட நிறுவனங்களில் இருந்து விலைப்புள்ளி வரப்பெற்றது, வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 01. | Raj Engineering works, Batlagundu | 89916 |
| 02. | J.R.Engineering Works, Batlagundu | 93102 |
| 03. | Mani Engineering works Battagundu | 96052 |

**அலுவலக குறிப்பு**

1. மேற்படி பணிக்கு வரிசை 1-ல் குறிப்பிட்டுள்ள Raj Engineering works, Batlagundu நிறுவனம் குறைந்த பட்ச விலைப்புள்ளி கோரியுள்ளதால் மேற்படி நிறுவனத்தின விலைப்புள்ளி தொகையினை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார பணியினை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 46 / 2020 / எச்1**

**தீர்மான எண் :** 1593
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 02 :

இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் TN60 L 6394-க்கான வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்து தகுதிசான்று பெறுவதற்கு உத்தேச செலவு தொகை ரூ.90,000/- க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார பணியினை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி பணியை விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 46 / 2020 / எச்1**

**தீர்மான எண் :** 1594
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 03 :

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் TN60 L 6411-க்கான வாகனத்திலுள்ள பழுதுகளை சரிசெய்வதற்கு விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட நிறுவனங்களில் இருந்து விலைப்புள்ளி வரப்பெற்றது, வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 01. | Raj Engineering works, Batlagundu | 93810 |
| 02. | J.R.Engineering Works, Batlagundu | 96760 |
| 03. | Mani Engineering works Battagundu | 99529 |

**அலுவலக குறிப்பு**

1. மேற்படி பணிக்கு வரிசை 1-ல் குறிப்பிட்டுள்ள Raj Engineering works, Batlagundu நிறுவனம் குறைந்த பட்ச விலைப்புள்ளி கோரியுள்ளதால் மேற்படி நிறுவனத்தின விலைப்புள்ளி தொகையினை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார பணியினை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 41 / 2020 / எச்1**

**தீர்மான எண் :** 1595

**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 04 :

இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் TN60 L 6411-க்கான வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்து தகுதிசான்று பெறுவதற்கு உத்தேச செலவு தொகை ரூ.1,00,000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார பணியினை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி பணியை விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 41 / 2020 / எச்1**

**தீர்மான எண் :** 1596

**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 05 :

தேனி - அல்லிநகரம் நகராட்சி குத்தகை இனங்களுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாவட்ட அளவிலான தமிழ் நாளிழதலில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நாளிதழ் | பட்டியல் எண் | செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமதி விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | தமிழக நியூஸ், | எண்: 1013 நாள்: 10-10-2020 | செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி. வெளியீட்டு ஆணை எண்: 115 / ஒப்ந்தப்புள்ளி / விளம்பரம் / 2020 நாள்: 09-10-2020. | ரூ: 66,912/- |

மேற்ககண்ட தொகை ரூ:66,912/- (ரூபாய்: அறுபத்து ஆறு ஆயிரத்து தொளாயிரத்து பனிரெண்டு மட்டும்) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து

மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 24 / 2020 / அ3**

**தீர்மான எண் :** 1597

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 06 :

தேனி - அல்லிநகரம் நகராட்சி அல்லிநகரயில் திரு.கோ.பிருதிவிராஜ் என்பவர் 19-03-2001 அன்று தண்ணீர் தொட்டி காவலராக தொகுப்பூதியத்தில் பணி நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்த நிலையில் 29-05-2003 அன்று பணியிடை காலமாகியுள்ளார். அதன் அடிப்படையில் தனியரின் வாரிசுதாரான திருமதி.நா.செல்வி என்பவர் தமக்கு குடும்ப ஓய்வூதியம் அனுமதித்திட கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு WP (MD) No. 2004/2020 தொடர்ந்துள்ளார்.

மேற்கண்ட வழக்கில் நகராட்சி சார்பாக நகராட்சி வழக்கறிஞர் திரு.K.ஹேம கார்த்திகேயன் அவர்கள் ஆஜராகிடவும், மேலும் வழக்கு தொடர்பான செலவினங்களுக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 938 / 2020 / அ-3**

**தீர்மான எண் :** 1598

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 07 :

தேனி- அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து முனைய கட்டண கழிப்பறையினை தொடர்ந்து நடத்த இயலாமல் குத்தகைதாரர் 30-11-2020 உடன் நகராட்சி வசம் ஒப்படைத்துள்ளார். மேற்கண்ட இனத்திற்கு புதிதாக ஏலம் கோர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

எனவே பயணிகள் நலன் கருதி காமராஜர் பேருந்து முணைய கட்டண கழிப்பறையினை தொடர்ந்து செயல்படுத்திடும் பொருட்டும், நகராட்சி வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டும் ஏல நடவடிக்கைகள் முடிவுற்று புதிய குத்தகைதாரருக்கு ஒப்படைக்கும் வரையில் நகராட்சி மூலம் வசூல் செய்திடவும், மேலும் அதற்கான ரசீது புத்தகங்கள் அச்சிடுவதற்கான

உத்தேச செலவினம் ரூ:30,000/-க்கு (ரூபாய்: முப்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது)

**<u>அலுவலக குறிப்பு</u> :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு அச்சகம் மூலம் ரசீது புத்தகங்கள் அச்சடித்திட மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ஈ) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 1107/ 2020 / அ3**

**தீர்மான எண் :** 1599
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ, ஆ, இ மற்றும் ஈ அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 08 :</u>

தேனி – அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 14-ல் உள்ள சாந்தம் நகல் லே - அவுட் முன்பு பிரதான சாலையில் நடப்பட்டிருந்த பூவாபுல் மரம் ( சுமார் 10மீ உயரம் ) தற்போது சாய்ந்த நிலையில் உள்ளது. மேற்படி மரத்தினால் பொதுமக்களுக்கு இடையூறுகள் ஏற்படாவண்ணம் அப்புறப்படுத்துவதற்கும் அதனை ஏலம் முறையில் கழிவு செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஏல நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 2803 / 2018 / இ1**

**தீர்மான எண் :** 1600
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 09 :</u>

தேனி – அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட என்.ஆர்.டி நகரிலுள்ள நேதாஜி

சாலையில் 12.10.2020-ம் தேதியன்று வேப்பமரத்தின் கிளை ( காந்திஜி சாலை அருகாமையில் ) சுமார் 6.00 மீட்டர் நீளம் உடைந்து விழுந்து விட்டது. அவற்றினை பொதுமக்கள் நலன் கருதி, போக்குவரத்துக்கு இடையூறு இன்றி உடனடியாக அப்புறப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது. உடைந்து விழுந்த வேப்ப மரத்தின் கிளையினை ஏலம் முறையில் கழிவு செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஏல நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 2803 / 2018 / இ1**

**தீர்மான எண் :** 1601
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 10 :</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சி கீழ்கண்ட குத்தகை இனம் குத்தகைதாரர்களால் தொடர்ந்து நடத்த இயலவில்லை என தெரிவித்து ஒப்படைப்பு செய்யும் காலம் வரையிலான குத்தகை தொகை செலுத்தப்பட்டு நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வரிவிதிப்பு எண் | குத்தகை இனம் | காலம் |
|---|---|---|---|
| 1 | 125/2015023 | கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையம் தரைதளம் தெற்கு பக்க உணவகம் | 31-03-2021 முதல் |

மேற்கண்ட குத்தகை கடையினை நகராட்சி வசம் கையகப்படுத்திடவும், மேலும் புதிதாக பொது ஏலம் கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி நகராட்சி நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டு தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் :1107 / 2020 / அ3**

**தீர்மான எண் :** 1602
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 11 :

இந்நகராட்சி பொதுப் பிரிவில் கணக்கராக பணியாற்றி வரும் திரு.சா.ரெத்தினப்பா கார் வாங்குவதற்கு முன்பணம் தொகை ரூ.6,00,000/- **(** ரூபாய் ஆறு இலட்சம் மட்டும் **)** வழங்க கோரி 11.11.2020 ஆம் தேதியன்று விண்ணப்பம் செய்துள்ளார். தனியரது விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1 திரு.சா.ரெத்தினப்பா கணக்கர் நிரந்திர பணியிடத்தில் பணிபுரிவதால், அன்னார் பெற்று வரும் விதத்தின் படி தனியர் முன்பணம் பெற தகுதியுடையவர் ஆவார்.

2 திரு.சா.ரெத்தினப்பா கணக்கர் 30.04.2023 அன்று பணி ஓய்வு பெற இருப்பதால் தனியருக்கு அனுமதிக்கப்படும் முன்பணம் நிர்ணயம் செய்யப்படும் 26 தவணையில் பிடித்தம் செய்ய இயலாது என்பதால் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் தொகை தவிர்த்து நிலுவையில் உள்ள தொகையினை அன்னாரது ஓய்வூதியப் பணப்பயன்களில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி முன்பணம் வழங்க அனுமதிக்கலாம்.

3 மேற்கண்ட முன்பணத்தினை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் :2719 / 2020 / பி2**

**தீர்மான எண் :** 1603
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு 1, 2, மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 12 :

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட **1** முதல் **33** வரை உள்ள வார்டுகளில் சொத்துவரி, காலிமனைவரி, குடிநீர்கட்டணம், தொழில்வரி ,பாதாளச்சாக்கடை கட்டணம், தொழில் உரிமக் கட்டணங்கள், வரி மற்றும் வரியில்லா இனங்களுக்குரிய தொகையினை 100% வசூல் செய்து முடிக்க நகரில் ஆட்டோவில் ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ**1,00,000/–**க்கு (ஒருலட்சத்திற்கு) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு.**

1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்கண்ட செலவினத் தொகையை பொதுநிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம். அவசர அவசியத்தினை முன்னிட்டு தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 807 / 2019 /அ1**

**தீர்மான எண் :** 1604
**தீர்மானம்** **:** அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 13 :</u>

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 15-ல் உள்ள வள்ளி நகர் பகுதி திட்டச்சாலை D12 - D12 - ஐ பொதுமக்களின் போக்குவரத்திற்கு ஏதுவாக சாலை, வடிகால் மற்றும் சிறுபாலங்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளுவதற்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ.9.95/- இலட்சம் ஆகும். மேற்படி செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு**</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2994 / 2020 / இ1**

**தீர்மான எண் :** 1605
**தீர்மானம்** **:** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 14 :</u>

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 12-ல் உள்ள குறிஞ்சி நகர் – பெரியார் நகரிலுள்ள குறுக்குத் தெருக்களில் மண் சாலை பள்ளமாக உள்ளதால், மழை காலங்களில் தண்ணீர் தேங்கி நின்று பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூறுகளாக உள்ளது. எனவே மேற்படி தெருக்களில் கிராவல் கொண்டு நிரப்பி வடிகால் கட்டும் பணியினை மேற்கொள்ளுவதற்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ.4.70/- இலட்சம் ஆகும். மேற்படி மதிப்பீட்டிற்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2994 / 2020 / இ1**

**தீர்மான எண் :** 1606
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 15 :

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் 2020 - 2021 -ம் ஆண்டு பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ.11.00 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தேனி அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 1065 / 2020 / தி6, நாள்: 08.12.2020-ம் தேதிய செயல்முறைகள் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பணிகள் விபரம்**

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ( ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சி வார்டு 22, சின்னத்தேவர் சந்தில் தெற்குப் பக்கம் அங்கன்வாடி மையம் கட்டுதல் | 11.00 |

**அலுவலகக்குறிப்பு**

அ) மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க.எண் : 1996 / 2020 / இ1**

**தீர்மான எண் :** 1607
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 16 :

அரசாணை ( 4 ப ) எண் . 6, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 03.09.2020-ல் ஒவ்வொரு நகராட்சியிலும் உள்ள பூங்காக்களில் திறந்தவெளி உயற்பயிற்சி கூடம் மற்றும் யோகா மையம் அமைக்க தெரிவிக்கப்பட்டுள்ளதன் பேரில், இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான என்.ஆர்.டி நகரில் உள்ள காமராஜ் பூங்காவில் கீழ்கண்ட 2 பணிகள்

மேற்கொள்ளுவதற்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 35.00 **( 25.00 + 10.00 )** இலட்சம் ஆகும்.

**( ரூபாய். இலட்சத்தில் )**

| **பணிகளின் எண்ணிக்கை** | **பணியின் விபரம்** | **மதிப்பீடுத் தொகை** |
|---|---|---|
| 1 | காமராஜ் பூங்காவில் யோகா மையம் அமைத்தல் | 25.00 |
| 2 | காமராஜ் பூங்காவில் திறந்த வெளி உடற்பயிற்சி கூடம் அமைத்தல் | 10.00 |
| | **மொத்தம்** | 35.00 |

மேற்படி பணிக்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

அ ) மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2940 / 2020 / இ1**

**தீர்மான எண் :** 1608
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 17 :

தேனி - அல்லிநகரம் நகராட்சி கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையம் மற்றும் காமராஜர் பேருந்து முனையத்தில் கையில் பூ மற்றும் முறுக்கு விற்பனை வசூல் உரிமம் குத்தகை உரிமத்திற்கான (குத்தகை உரிமம் எண்: 125/2018020) மூன்றாண்டு குத்தகை காலம் 15-11-2020 உடன் முடிவடைகிறது. மேற்கண்ட குத்தகை இனத்தினை முறையாக கண்காணித்திடவும் மற்றும் நிர்வாக நடைமுறைக்கு ஏதுவாக, நடப்பு நிதியாண்டு முடிவடையும் காலமான 31-03-2021 முடிய தற்போதைய குத்தகை தொகையில் ஐந்து சதவீதம் உயர்வு செய்து குத்தகையினை அனுபவித்துகொள்ள குத்தகைதாரர் திரு.G.கஜேந்திரன் சம்மதம் தெரிவித்து கூடுதல் காலத்திற்கான தொயினை முழுமையாக செலுத்தி விண்ணப்பத்துள்ளார்.

எனவே மேற்கண்ட குத்தகை இனத்தினை 31-03-2021 வரையில் நீட்டித்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அ) ஆண்டு குத்தகை இனத்தினை முறையாக கண்காணித்திடவும் மற்றும் நிர்வாக நடைமுறைக்கு ஏதுவாகவும், குத்தகை நீட்டிப்பு வழங்கும் காலத்திற்கான தொகையினை முழுமையாக குத்தகைதாரர்

செலுத்தியுள்ளதால் 31-03-2021 முடிய குத்தகையினை நீட்டித்து வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 1146 / 2020 / அ3**

**தீர்மான எண் :** 1609
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 18 :</u>

தேனி- அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான மேற்கு சந்தை தக்காளி கடை எண் : 11 (வரிவிதிப்பு எண் : 125/2005286) திரு.பொன்னுவீர்ராஜா என்ற பெயரில் உள்ளது.

மேற்கண்ட கடையில் திரு.பொ.பென்னுவீர்ராஜா த/பெ. பொன்னுப்பிள்ளை மற்றும் திரு.த.தங்கமணி த/பெ. தங்கச்சாமி இருவரும் கூட்டாக தொழில் செய்த நிலையில், திரு.பொ.பென்னுவீர்ராஜா என்பவர் குடும்ப சூழ்நிலை காரணமாக கூட்டுத் தொழிலிருந்து விலகிக் கொள்வதாக கூட்டு வியாபார விலகல் பத்திரம் வழங்கியுள்ளார். அதன் அடிப்படையில் மேற்கண்ட குத்தகை இனத்தினை தமது பெயருக்கு பெயர் மாற்றம் செய்திட கோரி திரு.த.தங்கமணி என்பவரால் உரிய கட்டணம் செலுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அ) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண்: 92 நாள்: 03-07-2007-ன் படி மேற்கு சந்தை தக்காளி கடை எண் : 11 (வரிவிதிப்பு எண் : 125/2005286) திரு.பொ.பென்னுவீர்ராஜா என்பவர் பெயரிலிருந்து திரு.த.தங்கமணி என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 2723 / 2020 / அ3**

**தீர்மான எண் :** 1610
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 19 :</u>

தேனி- அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான மேற்கு சந்தை தக்காளி கடை எண் : 12 (வரிவிதிப்பு எண் : 125/2005287) திரு.G.ராஜேந்திரன் என்ற பெயரில் உள்ளது.

மேற்கண்ட கடையில் திரு.G.ராஜேந்திரன் த/பெ. கணேசன் மற்றும் திரு.த.தங்கமணி

த/பெ. தங்கச்சாமி இருவரும் கூட்டாக தொழில் செய்த நிலையில், திரு. திரு.G.ராஜேந்திரன் என்பவர் குடும்ப சூழ்நிலை காரணமாக கூட்டுத் தொழிலிருந்து விலகிக் கொள்வதாக கூட்டு வியாபார விலகல் பத்திரம் வழங்கியுள்ளார். அதன் அடிப்படையில் மேற்கண்ட குத்தகை இனத்தினை தமது பெயருக்கு பெயர் மாற்றம் செய்திட கோரி திரு.த.தங்கமணி என்பவரால் உரிய கட்டணம் செலுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அ) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண்: 92 நாள்: 03-07-2007-ன் படி மேற்கு சந்தை தக்காளி கடை எண் : 12(வரிவிதிப்பு எண் : 125/2005287) திரு. திரு.G.ராஜேந்திரன் என்பவர் பெயரிலிருந்து திரு.த.தங்கமணி என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 2724/ 2020 / அ3**

**தீர்மான எண் :** 1611
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 20 :</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து முனைய கட்டண கழிப்பறை குத்தகை இனத்தை கொரோனா ஊரடங்கு காரணமாகவும், அருகில் உள்ள இலவச கழிப்பறை தற்போது கட்டண கழிப்பறையாக செயல்படுவதாலும் வசூல் மிகவும் குறைவாக இருப்பதால் குத்தகைதாரர் தொடர்ந்து நடத்திட இயலவில்லை என தெரிவித்து 30-11-2020 முதல் நகராட்சி வசம் ஒப்படைத்து விட்டார். எனவே மேற்கண்ட குத்தகை இனத்திற்கான வைப்புத் தொகையினை கீழ்கண்டவாறு குறைத்து நிர்ணயம் செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | குத்தகை இனம் | ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட முன்வைப்புத் தொகை மற்றும் கூடுதல் வைப்புத் தொகை | தற்போது நிர்ணயம் செய்யப்பட்ட முன்வைப்புத் தொகை மற்றும் கூடுதல் வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1 | காமராஜர் பேருந்து முனைய கட்டண கழிப்பறை | ரூ:4,00,000/- மற்றும் | ரூ:3,00,000/- மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | | ரூ:4,00,000/- | ரூ:2,00,000/- |

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் :1107 / 2020 / அ3**

**தீர்மான எண் :** 1612
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 21 :

தேனி- அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21ல் உள்ள கே. ஆர். ஆர். நகரில் 6 வது குறுக்குத்தெருவில் குடிநீருக்காக கட்டப்பட்டுள்ள மேல்நிலைத்தொட்டி கட்டப்பட்டு சுமார் 35 ஆண்டுகளான நிலையில்இ தற்போது பழுதடைந்து மிக மோசமான நிலையில் உளளது. ஏனவே, மேற்கண்ட தொட்டியினால், எந்த ஒரு விபத்துகள் ஏற்படா வண்ணம் காக்கும் பொருட்டு, அதனை இடித்து அப்புறப்படுத்த வேண்டியிருப்பதால், அதற்கான உத்தேசச்செலவினம் ரூ.80,000/- ( ரூபாய். எண்பதினாயிரம் மட்டும் ) ஆகும். எனவே, மேற்கண்ட பணிக்கும், அதற்கான உத்தேசச்செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோர அதற்கான விளம்பரச்செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 3007 / 2020 / இ2**

**தீர்மான எண் :** 1613
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ, ஆ, மற்றும் இ அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 22 :</u>**

தேனி- அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10ல் உள்ள சொக்கமன் தெருவில் உள்ள மினிபவர் பம்புக்கான ஆழ்துளைகிணறு மண் சரிவாக முடப்பட்ட காரணத்தினால், மேற்படி பொருத்தப்பட்டிருந்த மோட்டர் மற்றும் பம்ப் வெளியே எடுக்க முடியாத நிலையில் இருப்பதால், மேற்படி இடத்தில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மோட்டார் பம்ப் Hose மற்றும் அதற்கான கேபிள் புதியதாக அமைக்கப்பட வேண்டியிருப்பதாலும், மற்றும் வார்டுஎண். 12 ல் உள்ள வெங்கலா நகர் முதல் தெருவில் உள்ள ஆழ்துளை கிணற்றிற்கான மேடை பழுதடைந்து உடைந்து விட்ட காரணத்தினால், புதிதாக மேடை அமைப்பதற்கும், அதற்கான உத்தேசச்செலவினம் ரூ.3,20,000/- ( ரூபாய்.மூன்று இலட்சத்தி இருபதினாயிரம் மட்டும் ) ஆகும். எனவே, மேற்கண்ட பணிக்கும், அதற்கான உத்தேசச்செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோர அதற்கான விளம்பரச்செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 3005 / 2020 / இ2**

**தீர்மான எண் :** 1614
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அ, ஆ, மற்றும் இ அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 23 :</u>**

தேனி- அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1ல் உள்ள பள்ளிஓடைத்தெரு, வார்டு எண். 4ல் உள்ள மச்சால் தெரு, வார்டு எண் 08 ல் உள்ள வீரப்ப அய்யனார் கோயில் சாலைகளில் உள்ள பொதுக்கழிப்பிடம் மற்றும் வார்டு எண்.13 ல் உள்ள ஏ.டி. காளியம்மன் கோயில் தெரு ஆகிய இடங்களில் உள்ள மினி பவர் பம்ப்க்கான மோட்டார், பம்ப் அதற்கான Hose மற்றும் கேபிள் ஆகியவை பழுதடைந்துள்ள நிலையில் உள்ளது.

இதனால் பொது மக்கள் தண்ணீர் வசதி இன்றி மிகவும் சிரமத்திற்குள்ளாகின்றனர். எனவே, பொது மக்களின் நலன் கருதி மேற்படி இடங்களில் உள்ள ஆழ்துளை கிணறுகளில் தண்ணீர் வசதி ஏற்படுத்தி தர புதிதாக பணி மேற்கொள்ளவும், அதற்கான உத்தேசச்செலவினம் ரூ.2,45,000/- ( ரூபாய். இரண்டு இலட்சத்தி நாற்பத்தி ஐந்தாயிரம் மட்டும் ) ஆகும். அதற்கான உத்தேசச்செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோர அதற்கான விளம்பரச்செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 3006 / 2020 / இ2**

**தீர்மான எண் :** 1615
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ, ஆ, மற்றும் இ அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 24 :</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சி கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலைய செகண்டரி பிளாக் திண்டுக்கல் பேருந்துகள் நிற்குமிடத்தின் வடகிழக்கு பகுதியில் உள்ள காலியிடத்தில் இருசக்கர வாகனங்கள் மற்றும் தள்ளுவண்டிகள் நிறுத்தப்படுவதுடன் தற்காலிக ஆக்கிரமிப்புகள் மேற்கொள்ளப்பட்டு, அவ்வப்போது அதனை நகராட்சி மூலம் அப்புறப்படுத்தப்படுகிறது. அதன் காரணமாக பேருந்து நிலையத்திற்கு வரும் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுகிறது. மேலும் பேருந்து நிலையத்தினை ஆய்வு செய்த உதவி ஆட்சியர் அவர்கள் பேருந்து நிலையத்தில் ஆக்கிரமிப்புகளை தவிர்த்து முறையாக பராமரத்திடவும், மேலும் பேருந்து நிலையத்தில் உள்ள காலியிடத்தினை நகராட்சிக்கு வருவாய் ஏற்படுத்தும் வகையில் தரைவாடகை அடிப்படையில் ஏலம் விட அறிவுறுத்தியுள்ளார்.

எனவே பேருந்து நிலையத்தினை ஆக்கிரப்பு ஏற்படாமலும், மேலும் நகராட்சி நிதி வருவாயினை அதிகரிக்கும் பொருட்டு பேருந்து நிலைய செகண்டரி பிளாக் திண்டுக்கல் பேருந்துகள் நிற்குமிடத்தின் வடகிழக்கு பகுதியில் உள்ள காலியிடத்தினை மாத வாடகை அடிப்படையில் குத்தகை விடுவதற்கும், மேலும் கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்ட

முன்வைப்புத் தொகைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | குத்தகை விபரம் | முன் வைப்புத் தொகை |
|---|---|---|
| 1 | கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலைய செகண்டரி பிளாக் திண்டுக்கல் பேருந்துகள் நிற்குமிடத்தின் வடகிழக்கு பகுதியில் உள்ள காலியிடம் (16 X 10 - 160 ச.அ.) | ரூ: 3,00,000/- |

அலுவலக குறிப்பு

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் :1107 / 2020 / அ3**

**தீர்மான எண் :** 1616
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 25 :

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு நுண்ணுயியர் உரக்கூடத்தில் சேகரமாகும் குப்பைகளிலிருந்து உரம் தயாரிக்கும் பொருட்டு தவிடு, உம்மி, தயிர் மற்றும் வெல்லம் ஆகிய பொருட்களுக்கு உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரிய வகையில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | பொருட்களின் விபரம் ( 1 கிலோ / லிட்டர்) | | | |
|---|---|---|---|---|---|
| | | தவிடு ரூ. | உம்மி ரூ. | தயிர் ரூ. | வெல்லம் ரூ. |
| 1. | S.லெனின், வள்ளி நகர், தேனி | 18 | 10 | 75 | 70 |
| 2. | V.ஆனந்த், தேனி. | 20 | 12 | 78 | 75 |
| 3. | S.ஆண்டவர், அல்லிநகரம். | 22 | 14 | 80 | 80 |

**அலுவலகக்குறிப்பு**

1. குறைவாக விலைப்புள்ளி வழங்கிய வரிசை எண்.1ல் காணும் S.லெரின், தேனி நிறுவனத்திடமிருந்து பொருட்களை கொள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 3158 / 2020 / எச்1**

**தீர்மான எண் :** 1617
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 26 :</u>**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு சொந்தமான நுண்ணுயியர் உரக்கூடத்தில் (Micro Composting Centre) சேகரமாகும் குப்பைகளை பிரித்து, அதில் மக்கும் குப்பைகளிலிருந்து உரம் தயாரிக்கும் பொருட்டு தேவையான தவிடு, உம்மி, தயிர் வெல்லம் மற்றும் துண்ணுயியல் கரைசல் (Effective micro Organism ) ஆகிய பொருட்களை ஒவ்வொரு மாதமும் தேவைக்கேற்ப கொள்முதல் செய்ய ஓர் ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.1.50 இலட்சத்தில் உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 3158 / 2020 / எச்1**

**தீர்மான எண் :** 1618
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 27 :</u>**

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் தரைத்தள பிரிவுகளில் உள்ள கணிணிகளுக்கு தனி UPS மூலம் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி UPS க்கான மின்கலங்கள் ( Battery ) சுமார் ஆறு ஆண்டுகளுக்கு முன்பு வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.
இந்நிலையில் தற்போது மின் கலங்களின் திறன் குறைந்து சார்ஜ் ஆகாததினால், மின்தடை ஏற்படும் போது UPS மூலம் தடையின்றி மின்சாரம் வழங்க முடியாததால் அனைத்து கணிணிகளும் தானாகவே அனைந்து விடுவதால் கணிணிகள் பழுதடைய அதிக அளவில் வாய்ப்புகள் உள்ளது. அதனை தவிர்க்கும் வகையில் நகராட்சியின் அலுவலகப் பயன்பாட்டிற்காக தற்போது 10 மின் கலங்களை ( Tubuler Battery - 23V - 110 AH ) புதியதாக வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.1.40 இலட்சம் ஆகும். மேற்படி மதிப்பீட்டிற்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர்

நிறுவனங்களில் விலைப்புள்ளி பெற்று மேல்நடவடிக்கை எடுப்பதற்கு மன்றம் அனுமக்கலாம்.

**ந.க.எண். 2899 / 2020 / இ1**

**தீர்மான எண் :** 1619
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ மற்றும் ஆஅனுமதிக்கப்பட்டது.

## பொருள் 28 :

தேனி- அல்லிநகரம் நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண் 22ல் சேல்ஸ் சொசைட்டி தெருவில் கண்ணாத்தா கோயிலுக்கு அருகாமையில் உள்ள மினி பவர் பம்பில், ஆழ்துளை கிணற்றில் பொருத்தப்பட்டிருந்த 1.50 HP மோட்டார் பம்ப் பழுதடைந்த காரணத்தினால், வெளியே எடுத்து ஆய்வு செய்யப்பட்டதில், மோட்டார் பம்பு மிகவும் மோசமான நிலையில், பழுது பார்த்த இயக்க முடியாத நிலையில், துருப்பிடித்து உள்ளது.எனவே, மேற்படி மோட்டார் மற்றும் பம்பிற்கு பதிலாக புதிதாக 1.50 HP மோட்டார், பம்ப் மற்றும் அதற்குத்தேவையான உதிரி பாகங்கள் வாங்கி பொருத்துவதற்கும், அதற்கான உத்தேசச்செலவினம் ரூ90,000/- ( ரூபாய். தொன்னூறு ஆயிரம் மட்டும் ) ஆகும். எனவே, மேற்கண்ட பணிக்கும், அதற்கான உத்தேசச்செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோர அதற்கான விளம்பரச்செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 3262 / 2020 / இ2**

**தீர்மான எண் :** 1620
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ, ஆ மற்றும் இஅனுமதிக்கப்பட்டது.

## பொருள் 29 :

தேனி- அல்லிநகரம் நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண் 32ல் உள்ள இராஜா களம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணற்றுனுள் , மரம் வேர் சென்று, மோட்டாரை இயக்க செய்ய விடாத நிலையில் உள்ளது. இதனால் மோட்டாரை

வெளியே எடுக்க முடியாத நிலையிலும் உள்ளது. இதனால் மேற்படி பகுதியில் வசிக்கும் பகுதியில் வசிக்கும் மக்கள் குடிநீர் நலன் கருதி , மேற்படி பகுதியில் புதியதாக ஆழ் துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்துவதற்கும், அதற்கான உத்தேசச்செலவினம் ரூ3,00,000/- ( ரூபாய். மூன்று இலட்சம் மட்டும் ) ஆகும். எனவே, மேற்கண்ட பணிக்கும், அதற்கான உத்தேசச்செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோர அதற்கான விளம்பரச்செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 3286 / 2020 / இ2**

**தீர்மான எண் :** 1621
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ, ஆ மற்றும் இஅனுமதிக்கப்பட்டது.

## பொருள் 30 :

தேனி- அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான கர்னல் பென்னிக்குக் புதிய பேருந்து நிலையத்தில், கோவை, திருப்பூர் மற்றும் நகரப்பேருந்துகள் நிற்கும் தடத்தில் அமைக்கப்பட்டுள்ள உயர் மின கோபுர விளக்கில் பொருத்தப்பட்டிருந்த 12 எண்ணிக்கை 300w மின் விளக்குகள் உயர் மின் அழுத்தம் காரணமாக எரிந்து பழுதடைந்து விட்டது. எனவே, மேற்கண்ட மின் விளக்குகளை புதிதாக மாற்றி அமைக்கப்பட வேண்டியுள்ளதால், 800 w மின் விளக்குகளுக்கு பதிலாக 300 w LED Bulb Lighting ஆக மாற்றி அமைப்பற்கும், மேலும் மின் அளவினை குறைக்கும் பொருட்டு மேற்கண்ட மின் கோபுர விளக்கிற்கு ஒரு Timer ( L& T Clock meld ) பொருத்துவதற்கும், அதற்கான உத்தேசச்செலவினம் ரூ.6,00,000/- ( ரூபாய். ஆறு இலட்சம் மட்டும் ) ஆகும். எனவே, மேற்கண்ட பணிக்கும், அதற்கான உத்தேசச்செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோர அதற்கான விளம்பரச்செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 3287 / 2020 / இ2**

**தீர்மான எண் :** 1622
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ, ஆ மற்றும் இஅனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 31 :</u>

தேனி- அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், தெருவிளக்குகளை On / Off சுவிட்ச்களுக்கான மின் இணைப்பு வயர்கள் மற்றும் சுவிட்சுகள் Fies Carrier பழுதடைந்த சுமார் 50 இணைப்புகளில் உள்ளது. பொது மக்கள் நலன் கருதியும், மேலும் விபத்துகள் ஏற்படா வண்ணம் முன்னெச்சரிக்கையாக மேற்படி பொருட்கள் மற்றும் அதற்கான பாதுகாப்பு பெட்டிகளை புதிதாக மாற்றி அமைக்க அதற்கான உத்தேசச்செலவினம் ரூ.7,00,000/- ( ரூபாய். ஏழு இலட்சம் மட்டும் ) ஆகும். எனவே, மேற்கண்ட பணிக்கும், அதற்கான உத்தேசச்செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோர அதற்கான விளம்பரச்செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 3288 / 2020 / இ2**

**தீர்மான எண் :** 1623
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ, ஆ மற்றும் இஅனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 32 :</u>**

தேனி- அல்லிநகரம் நகராட்சிக்கட்பட்ட வார்டு எண். 17 முதல் 33 வரை பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள மினிபவர் பம்புகளில் ஏற்படுகின்ற பழுதுகளை சீர்செய்ய ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ள, இந்நகர்மன்ற தீர்மான எண். 1385. நாள். 10.03.2020 ல் மதிப்பீட்டுத்தொகை. ரூ. 8.50 இலட்சத்திற்கு ஒப்புதல் பெற்று , மேற்கண்ட பணியினை கடந்த ஏப்ரல் -2020 முதல் செப்டம்பர் -2020 வரை மேற்கொள்ளப்பட்ட வகையில், அங்கீகரிக்கப்பட்ட தொகையான ரூ.8.50 இலட்சத்திற்கும் செலவாயிற்று.

எனவே, பொது மக்களின் குடிநீர் அவசியம் கருதி டிசம்பர்- 2020 முதல் மார்ச்-2021 வரை மேற்கண்ட வார்டு பகுதிகளில் உள்ள மினி பவர் பம்ப்களில் ஏற்படுகின்ற பழுதுகளை சீர் செய்யும் பொருட்டு , அதற்கான மதிப்பீடு ரூ. 8.50 இலட்சம் ஆகும். இத்தொகையில் மேற்படி பணியினை நகராட்சி குடிநீர் தலைப்பின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 3289 / 2020 / இ2**

**தீர்மான எண் :** 1624
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அ, ஆ மற்றும் இஅனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 33 :</u>**

தேனி- அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 33 வரை பகுதிகளில் குடிநீர் விநியோகத்திற்காக பதிக்கப்பட்டுள்ள Pumping Main மற்றும் Distribution Main பைப் லைன்களில் ஏற்படும் உடைப்புகள் மற்றும் கழிவுகளை சீர் செய்யும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண். 1392. நாள் 10.03.2020 ன் படி, மதிப்பீட்டுத்தொகை

ரூ. 5.00 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, பணி மேற்கொள்ளப்பட்டது.

தற்போது மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகை செலவாயிற்று. மேலும், தற்போது கொரனா -19 வைரஸ் நோய் அதிகமாக பரவி வருகின்ற காலமாக இருப்பதாலும், இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டும், பொது மக்களின் குடிநீர் விநியோகம் கருதி, இண்டு மாதம் ( அதாவது ஜுலை -2020, ஆகஸ்ட்-2020 ) காலத்திற்கு உத்தேசத்தொகை ரூ. 2,50,000/- மட்டும் ஆகும். மேலும், இப்பணியினை ஏற்கெனவே மேற்கொண்டு வருகின்ற ஒப்பந்ததாரர் மூலம், ஏற்கெனவே குறிப்பிட்டுள்ள விலை விகிதத்தில் மேற்கொள்வதற்கும், இப்பணியினை அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட பணியினை தொடர்ந்து மேற்கொள்ளுவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்கண்ட பணிக்கு இந்கர்மன்ற தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 242 / 2020 / இ2**

**தீர்மான எண் :** 1625
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ, ஆ மற்றும் இஅனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 34 :</u>**

தேனி- அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான குன்னூர் குடிநீர் திட்டம் மற்றும் அரப்படித்தேவன்பட்டி குடிநீர் திட்டம் ஆகிய திட்டத்தில் பொருத்தத்தப்பட்டுள்ள மின்மோட்டார்கள் ( 5 HP, 25 HP, & 50HP) பழுதடைந்துள்ளதால், மேற்படி மோட்டர்களை சீர் செய்யும் பொருட்டு , அதற்கான உத்தேசத்தொகை ரூ. 1,45,000/- மட்டும் ஆகும். இத்தொகையில் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளுவதற்கும், இப்பணி குடிநீர் விநியோகப்பணியாக இருப்பதால், அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணி செய்யும் பொருட்டு மேற்கண்ட திட்டத்தில் மோட்டர்கள் வால்வுகள் மற்றும் பைப்லைன்களில் ஏற்படும் பழுதுகளை ஏற்கெனவே சீர் செய்து வரும், திரு. எஸ்.

மாணிக்கம் ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்வதற்கும், ஏற்கெனவே, மேற்படி ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள விலை விகிதத்தில் மேற்கொள்ளுவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 249 / 2020 / இ2**

**தீர்மான எண் :** 1626
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ மற்றும் ஆஅனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 35 :</u>

தேனி – அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 9-ல் உள்ள அண்ணா நகர் பகுதியில், ஏற்கனவே கட்டப்பட்டுள்ள வடிகாலின் பக்கச்சுவர்கள் பழுதடைந்த நிலையில் உள்ளதால், மேற்படி வடிகாலினை மேம்படுத்தும் பொருட்டு அதற்கான பணிகள் மேற்கொள்ளுவதற்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ.3.40/- இலட்சம் ஆகும். மேற்படி மதிப்பீட்டிற்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு**</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 3295 / 2020 / இ1**

**தீர்மான எண் :** 1627
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 36 :

தேனி - அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 33 வரை உள்ள பகுதிகளில் தற்போது பாதாள சாக்கடை வீட்டு இணைப்பு பணி மற்றும் குடிநீர் வீட்டு இணைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் மேற்கொள்ளும் போது தார்சாலை உள்ள இடங்களில் சாலைகள் தோண்டப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. தோண்டப்பட்ட இடங்களில், பள்ளங்கள் ஏற்படுவதால், வாகனங்கள் போக்குவரத்திற்கும் மற்றும் பொதுமக்கள் போக்குவரத்திற்கும் மிகவும் இடையூறுகளாக உள்ளது.

எனவே மேற்படி பணியினை பொதுமக்களின் நலன் கருதி அவ்வப்பொழுது உடனே சீர் செய்யும் பொருட்டு Advance Patch பணிகள் மேற்கொள்ளுவதற்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ.6.50/- இலட்சம் ஆகும். மேற்படி மதிப்பீட்டிற்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 3294 / 2020 / இ1**

**தீர்மான எண் :** 1628
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 37 :

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் அலுவலக வளாகத்தில் உள்ள 35 KVA ஜெனரேட்டரின் உதிரி பாகங்கள் மாற்றுதல் மற்றும் வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் மற்றும் 15 KVA சோலார் யூனிட் பராமரிப்பு பணி மேற்கொள்ளும் பணிக்கு **23.11.2020**ம் தேதியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ | நிர்ணயிக்கப்பட்ட விலைய விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** |
| 1 | M/s . R.A. Jeyasudarasan & co, Theni | 136385.00 | குறைவு |
| 2. | M/s Mayuraa Home Applicacance, Theni | 144830.00 | கூடுதல் |
| 3 | M/s Bombay Treaders, Theni | 149580.00 | கூடுதல் |

**அலுவலகக்குறிப்பு**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பராமரிப்பு பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள M/s . R.A. Jeyasudarasan & co, Theni. அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2896 / 2020 / இ1**

**தீர்மான எண் :** 1629
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
தேனி – அல்லிநகரம் நகராட்சி